1969 செப்டம்பர் 11]

திரு. என். வரதராஜன் : தஞ்சையில் கீழ்வெண்மணியில் எரிந்து போன குடிசைகளைக்கண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்ணீர் வடித்தார்கள் என்று பத்திரிகைகளில் படித்தோம். இன்னும் அந்தக் குடிசைகள் கட்டப்படாமல் இருக்கின்றன. அதிகாரிகளுக்குப் போதுமான அதிகாரங்கள் இல்லாததினால்தான் அந்தத் தாமதம் ஏற்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கீழ் வெண்மணியில் தீப்பற்றி எரிந்த 25 ஹரிஜன குடும்பங்களுக்கு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, அக்குடும்பங்களில் உள்ள குழந்தைகளின் புத்தகங்கள் எரிக்கப்பட்டிருந்த காரணத்தினால், அவர்களின் ஆடைகள் எரிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அதற்காக உடனடியாக இயக்குனர் அவர்கள் தமக்கு அனுமதிக்கப்பட்டுள்ள பணத்திலிருந்து ரூ. 1,250 உடனே கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதுபற்றி பரிசிலனை செய்யப்பட்டது. எரிக்கப்பட்ட 25 குடும்பங்கள் இருந்த இடமானது ஒரு தனிப் பட்டவருக்குச் சொந்தமான இடம். அந்த நிலத்திற்குச் சொந்தக் காரர்தான் தீ வைத்தார் என்றெல்லாம் அந்த நேரத்தில் சொல்லப் பட்டது. அந்தக் குடும்பங்கள் மீண்டும் அந்தப் பகுதியில் வாழ விரும்புகிறார்களா என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் அதற்கு ஒத்துக் கொண்ட பிறகுதான் மீண்டும் அந்த இடத்தை அரசாங்கம் ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்காக இரண்டு இரண்டு வீடுகளாகச் சேர்த்து ரூ. 3,200-க்கு கட்டிக் கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கு வாழ விரும்புகிறார்களா இல்லையா என்பது இப்போது பரிசிலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

கோவை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம்

* 201 வினா.—**திரு. கே. என். குமாரசாமி** : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு மான்யமாக பணம் வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது விஷயம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. கே. என். குமாரசாமி : ஹரிஜனங்களுக்காக நிலங்கள் ஒதுக்கப்பட்டு அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டும்கூட வீடுகள் கட்டப்படாமல் அவை பல ஆண்டுகளாக சும்மா இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அது சம்பந்தமாக சீக்கிரம் முடிவெடுத்து அதற்குண்டான தொகைகளை ஒதுக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

[1969 செப்டம்பர் 11

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக அரசின் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் ஏறத்தாழ 80,000 மனைக்கட்டுகள் கொடுக்கப்பட்டு வீடுகள் கட்டப்படாமல் விடப்பட்டிருந்தன. ஆனால் நாங்கள் பொறுப்பேற்ற பிறகு மனைக்கட்டுகள் கொடுக்கப்பட்டு வீடுகள் கட்டப்படாமல் இருக்குமானால் மீண்டும் அவைகளைத் திருப்பி எடுத்துக்கொள்ளுவோம் என்று பயமுறுத்தி கூடுமானவரையில் அவர்களை வீடு கட்ட வைத்திருக்கிறோம். அப்படி கட்டாதவர் களுக்கு இந்த அரசு ஒரு உதவித் தொகை கொடுத்து கட்டுவிக்க வேண்டுமென்றதொரு திட்டத்தை உருவாக்கி அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் இப்போது செய்து கொண்டுவருகிறது. மேலும் புது வீடுகள் கட்டவேண்டுமென்ற எண்ணத்தில் மத்திய அரசின் உதவித் தொகையோடு கட்டுவதற்காக ஒரு செயற் குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்திய அரசு அதற்கு ஒப்புதல் இன்னும் தரவில்லை. மாநில அரசு 1969–70-ல் மூன்று லட்சம் ரூபாய் மானியமாகவும் இரண்டு லட்சம் ரூபாய் கடனாகவும் ஒதுக்கி ஐந்து லட்சம் ரூபாய் செலவழித்து ரூ. 500, ரூ. 680 என்று தீப்பற்றி எரியாத வீடுகள் கட்டித் தர அரசாங்கம் முடிவு எடுத்து மாவட்ட நல அதிகாரி மூலம் எந்தெந்த மாவட்டங்களில் எங்கெங்கு வீடுகள் கட்டலாம் என்று செயற்குறிப்பு அனுப்புமாறு கேட்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் கோவை மாவட்டத்திலிருந்து மாவட்ட நல அதிகாரி செயற்குறிப்பு அனுப்புவார்களானால் இந்தத் தொகையில் வீடுகள் கட்டித் தர அரசாங்கம் நடவடிக்கைகளில் ஈடுபடும்.

திரு. விஜயரகுநாத தொண்டமான் : இப்போது வீட்டு வசதி இல்லாமல் நாடோடிகளாக இருக்கக்கூடிய நரிக்குறவர்களுக்கு இந்தக் கடன் உதவி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அவர்கள், நாடோடிகளாக இல்லாமல் குறிப்பாக ஓர் இடத்தில் தங்கி வாழக் கூடியவர்களாக இருந்தால் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறது.

கோவை மாவட்டத்திலுள்ள அரிசன விடுதிகள்

* 202 வினா.—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள அரசினர் அரிசன மாணவ, மாணவியர் விடுதிகளில் அரசினருக்குச் சொந்தமான கட்டடங் களில் இயங்கி வருபவை எத்தனை?

(இ) வாடகை கட்டடங்களில் இயங்கி வருபவை எத்தனை ?

(உ) அவைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசுக்கு எண்ணம் உண்டா ?